27.8.2013
600 009

063916

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் – இரண்டாம் கட்டமாக 26 மாதிரிப் பள்ளிகளைத் தொடங்கவும் – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவித்து வெளியிடப்பட்ட அரசாணைக்கு – திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (சி2) துறை

அரசாணை (நிலை) எண் 126.

நாள் 16.07.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
ஆனி 32

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 20.03.2013.
2. திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை–6, கடித ந.க.எண்.566/அ2/அஇகதி/2012, நாள் 04.06.2013.

*******

ஆணை:–

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்குநர், மாதிரிப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அப்பள்ளிகளின் அலுவலகத் தலைமையதிகாரிகளாக (Heads of office) பணியாற்றுவார்கள் என அரசாணையில் குறிப்பிடாத நிலையில், இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு தனித்தனியே கருவூல விதி எண் 70 (Tamil Nadu Treasury Code 70) வழங்காததால், ஊதியம் பெற்று வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண் 47, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.3.2013க்கு தக்க திருத்தம் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக்கல்வித் (சி2) துறை, நாள் 20.03.2013க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

(i) மேற்காணும் அரசாணையின் பத்தி எண்.7க்கு பின்னர் பின்வரும் பத்தி சேர்க்கப்படுகிறது.

8. "புதிய மாதிரி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் புதிய அலுவலக தலைமை அதிகாரியாக (Head of Office) பணியாற்றுவார்கள். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு அப்பகுதிக்குரிய சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்".

ii) ஏற்கெனவே உள்ள பத்திகள் 8, 9 மற்றும் 10 ஆகியவை முறையே 9, 10 மற்றும் 11 என திருத்தப்படுகின்றன.

2. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.33428/கல்வி II/2013, நாள் 11.7.2013ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்:–
நிதி (கல்வி – II/வரவு செலவு பொது – II/வரவு செலவு பொது I/ மை.ம.ஆ.பி.) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 18/7/13